بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ
In the name of Allah the Most Gracious the Ever Merciful

Press Desk
Ahmadiyya Muslim Jamaʻat
INTRENATIONAL
(INDIA)

A Registered Religious and Charitable Society in India under the Societies Registration Act XXI 1860

# PRESS RELEASE

Dated: April 29th 2015

**மனிதனுக்கு முதல் தேவை உணவாகும்; உணவு வேளாண்மை இல்லாமல் கிடைக்க முடியாது - உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இமாம்**

எந்தவொரு நாட்டின் முன்னேற்றத்திற்கான அடிப்படை அதன் தொழில், வியாபாரம் ஆகும். இந்தியா எத்தகைய மகத்தான நாடு என்றால், அதன் மக்கள்தொகையில் பாதியை விட அதிகமான பகுதி கிராமப்புறத்து மக்களைக் கொண்டதாக இருக்கிறது. இந்த கிராமங்களில் வாழும் மக்களின் வாழ்வாதாரமும் விவசாயமேயாகும். நமது இந்திய நாடு ஒரு வளமான நாடாகும். இங்குள்ள தட்பவெப்பநிலை எல்லா வகையான விளைச்சலுக்கும் பயனுள்ளதாகும். ஆனால் இன்று விவசாயத் தொழிலுக்கு சிறப்பான முக்கியத்துவம் வழங்கப்படுவதில்லை என்பதைப் பார்க்க முடிகிறது. அதன் விளைவாக விவசாயிகள் விவசாயத்தை விட்டு விடும் கட்டாயத்திற்குள்ளாகிக் கொண்டிருக்கின்றனர். அதன் கட்டாய விளைவு நாட்டில் உணவுப் பற்றாக்குறையும் விலை உயர்வுமாகும்.

உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இமாம் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது சாஹிப் 2008-ஆம் ஆண்டு இந்திய சுற்றுப் பயணத்தின்போது இறைவனால் அவர்களுக்கு வழங்கப்பட்ட அறிவுத்திறமையினால் இந்தப் பிரச்சனையை தொலைநோக்குப் பார்வையுடன் கண்டறிந்து இந்தியாவின் பத்திரிகையாளர்களுக்கு இந்த முக்கியமான விஷயத்தின் பக்கம் கவனமூட்டியவாறு இவ்வாறு கூறினார்கள்:

**‘‘இப்போது நகரங்கள் மற்றும் ஊர்களின் பக்கம் கவனம் இருக்கிறது. அதாவது மக்கள் கிராமங்களை விட்டு விட்டு நகரங்களிலும் ஊர்களிலும் குடிபெயர்ந்து செல்கின்றனர். இதுவே வேலையில்லாத நிலைக்கு மிகப் பெரிய காரணமாக ஆகிக் கொண்டிருக்கிறது. ஏனெனில் தொழில்களை விட அதிகமாக வேட்பாளர்களின் எண்ணிக்கை கணிசமான அளவுக்கு அதிகரித்துக் கொண்டிருக்கிறது. எனவே விவசாயத்தை வளம் பெறச் செய்வதன் பக்கம் அரசாங்கங்களுக்கு குறிப்பாக கவனம் இருக்க வேண்டியது அவசியமாகும்.’’**

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இமாமும் விவசாயத் தொழில் நுட்பத்தில் திறமை மிக்கவர்கள் ஆவார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். அவர்கள் (ஆப்பிரிக்காவிலுள்ள) கானாவின் வரலாற்றில் முதன் முறையாக கோதுமையை விளையச் செய்வதில் வெற்றி கண்டார்கள். அவர்கள் விவசாயத்தை வளமாக்குவது பற்றி கவனமூட்டியவாறு மேலும் அதிகமாக இவ்வாறு கூறினார்கள்:

‘‘எப்போதும் மனிதனின் முதன்மையான முக்கியத்துவம் வாய்ந்ததாக உணவே இருந்திருக்கிறது. பிறகு இரண்டாவது, அணிவதற்கு ஆடை. மூன்றாவது, வாழ்வதற்கு வீடு. நான் கூறியது போன்று முதன்மையானது உணவாகும். மேலும் உணவு விவசாயம் இல்லாமல் உருவாக முடியாது. நமது துணைக்கண்டத்தின் தட்பவெப்ப நிலை எப்படிப்பட்டதென்றால், நாம் அதில் எல்லா விதமான விவசாயமும் செய்யலாம். இந்தியாவில் இதன் பக்கம் ஓரளவுக்கு கவனம்

ஏற்பட்டுள்ளது.....ஆயினும் நாம் நமக்குக் கிடைத்த இயற்கை காரணிகளை உரிய முறையில் பயன்படுத்தாமல் அவற்றை வீணாக்கிக் கொண்டிருக்கிறோம். நம்மிடம் **Horticulture** (தோட்டக்கலை) மற்றும் **Genetic Scientist** (மரபணு அறிவியல் அறிஞர்) ஆகிய எல்லாவிதமான அறிவியல் அறிஞர்கள் இருக்கின்றனர். அப்படியிருந்தும் கீழ்மட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு தனிப்பட்ட முறையில் அடிப்படையான உதவி செய்யும் பண்பு நம்மிடம் இல்லை.

இந்திய விவசாயிகளின் வறுமை நிலை யாருக்கும் மறைமுகமான ஒரு விஷயமல்ல. அவர்களின் உயிரைப் பறிக்கும் வறுமைகள் நாள்தோறும் நடந்து கொண்டிருக்கின்றன. விவசாயிகளுக்கு ஆர்வமூட்டுவதற்காக அவர்களின் நலனில் அக்கறை கொண்டவாறு இந்தியாவின் அனைத்து அமைப்புகளும் தமது அரசியல் ஆதாயத்தை மறந்தவாறு, நம்பிக்கையிழந்து விட்ட அந்த விவசாயிகளின் வாழ்வில் ஒரு புதிய ஆன்மாவை உருவாக்குவதில் தமது பங்கை வகிக்க வேண்டும். மேலும் அவர்களுக்கு மதிப்பளியுங்கள். அந்த விவசாயிகளுக்கு முடிந்த அளவுக்கு உதவி செய்யுங்கள்.

இந்திய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் அநுதாபத்திற்கான போதனையை ஏன் வழங்குகிறதென்றால், நாட்டின் முன்னேற்றத்தில் நேர்மறையான பங்கை செலுத்துவது நமது ஈமானின் பகுதியாகும். மேலும் உலகளாவிய இந்த ஜமாஅத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் இறைவனின் படைப்பிங்களுடன் அநுதாபம் காட்டுவது தொடர்பாக போதனை வழங்கியவாறு இவ்வாறு கூறுகிறார்கள்:

**''எந்த மார்க்கத்தில் பொதுவான அநுதாபமே இல்லையோ அது மார்க்கமே அல்ல; மேலும் எந்த மனிதனிடம் அநுதாபத்தின் பண்பே இல்லையோ அவன் மனிதனே அல்ல.''** மேலும் அவர்கள் கூறுகிறார்கள்:

**''ஒரு தாய் தன் குழந்தைகளை நேசிப்பதைப் போன்று நான் மனித குலத்தை நேசிக்கிறேன். இன்னும் கூறுவதென்றால், அதை விட அதிகமாக நேசிக்கின்றேன்.''**

இந்தியாவிலுள்ள அனைத்து சகோதரர்களும் மார்க்கம், அரசியல், பிரிவுகளைக் கடந்து நமது நாட்டிற்கு தொண்டு செய்வதற்காக ஒன்றுபட வேண்டும் எனவும் நாட்டின் முன்னேற்றத்திற்காக நேர்மறையான பங்கை வகிக்க வேண்டும் எனவும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநரின் மேற்கண்ட வழிகாட்டலின்படி இந்தியாவின் எல்லா சகோதர்களையும் கேட்டுக் கொள்கிறோம்.

END RELEASE

---

For further details please contact:

Incharge Press & Media, Ahmadiyya Muslim Jama'at, India,

Qadian-143 516,Distt Gurdaspur, Punjab, India

Mobile:+9199887 57988, Email: pressamjindia@gmail.com

Tel: +91-1872-500311, Fax: +91-1872-500178

Noorul Islam Toll Free Number: 1800-3010-2131

Tamil Toll Free Number: 1800-425-40000